Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# நட்டுவாங்கம்

**திருமதி.தேவந்தி திருநந்தன்**
**நடனத்துறை, யாழ் பல்கலைக்கழகம்.**
**இலங்கை**

**ஆய்வுச்சுருக்கம்**

'சுருதிமாதா லயம் பிதா' என்பதற்கிணங்க ஆடலைச் சீரான முறையில் பக்கவாத்தியக் கலைஞரோடு இணைத்து நர்த்தகியை லயக்கட்டுக்குள் வைத்து இயக்கும் ஒரு கஞ்சற்கருவியாக நட்டுவாங்கத்தாளம் சிறப்பிடம் பெறுகிறது. இந்திய செவ்வியல் நடனங்களில் ஒன்றான பரதநாட்டியக்கச்சேரிகளில் முக்கியமான ஓர் இடத்தை இந் நட்டுவாங்கம் கொண்டுள்ளது. ஆடல் கற்பித்த நட்டுவனாரால் நட்டுவாங்கம் செய்தால்தான் நாட்டியக்கச்சேரி மிகவும் சிறப்பாகவும் நேர்த்தியாகவும் அமையும். இவ் ஆய்வின் அமைப்பானது நட்டுவாங்கத்தாளம், தாளத்தின் தோற்;றம், நட்டுவாங்கத் தாளத்தின் சிறப்பு, நட்டுவாங்கத்தாளத்தின் அமைப்பு, நட்டுவனார் பகுதி போன்றவற்றை உள்ளடக்கி ஆராயப்பட்டுள்ளது.

**திறவுச் சொற்கள்:-** மத்தளம், கரடிகை, தாளம், பிரம்மா, விஷ்ணு, தாள சமுத்திரம்

**முன்னுரை**

பரதநாட்டியக்கச்சேரிகள் அதற்கான பயிற்சிகளை மேற்கொள்ளும் போது தாளத்தைத்தட்டி வெளிப்படுத்துவதற்கும் நர்த்தகியைத் தாளக்கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கவும் நட்டுவாங்கம் இன்றியமையாத ஒன்றாகும். நாட்டியத்திற்குப் பயன்படுத்தப்படும் நட்டுவாங்கம் ஏனைய இந்திய செவ்வியல் நடனங்களிலும் இன்றியமையாத ஒன்றாகக் காணப்படுகின்றது. நாட்டியத்தின் உயிர்நாடியாக விளங்கும் நட்டுவாங்கமானது வடமொழியில் 'நட்' என்றால் நடனம் என்றும் 'அங்கம்' என்றால் ஒருபகுதி உறுப்பு என்றவாறு நாட்டியத்தை வழிநடத்திச் செல்வதற்கு மிகவும் இன்றியமையாது உள்ள ஓர் அங்கம் நட்டுவாங்கம் ஆகின்றது. நட்+ஆவி=அங்கம் நட்டுவாங்கம் ஆகின்றது. இது நட்டுவம் அல்லது நட்டவம் என்பதன் கருத்து நாட்டியத்திற்குப் பிள்ளைகளைப் பழக்கி அவர்கள் ஆடுவதற்கு நெறிப்படுத்தலாம். நட்டவம் என்ற சொல் நட்டு என்ற பதத்திலிருந்து (நட்டு – நடனம், அல்லது நாட்டியம்) வந்ததாகும். நட்டு, முட்டு என்ற சொல் இசையும் நடனமும், மிருதங்கம் நடனத்திற்குத் தேவையானவைகள் என்ற கருத்திலும் வரலாம். நட்டு முட்டு ஆசிய இருசொற்களும் இணைந்தே செல்லும் நட்டு என்றால் நடனம் அல்லது நடன ஆசான் முட்டு என்றால் மிருதங்கம் வாசிப்பவர் ஒரு நடன நிகழ்ச்சிக்கு இரண்டும் இருகண்கள்போல அதுவும் பரதநாட்டியத்திற்கு இன்றியமையாதது நட்டு முட்டுக்காரரென்றால்

நடன ஆசிரியரும் மிருதங்கக்காரரும் ஆகும். அன்றியும் இவர்களை நட்டுவமேளக்காரர் எனவும் அழைக்கப்படுவர். நட்டுவாங்கம் செய்வது என்றால் கோவிலிலோ அல்லது அரசனின் சமஸ்தானத்திலோ அல்லது தேவர்சபையிலே நாட்டிய ஆசிரியரின் சேவையாகும். இதையே மகாபாரதச் சூடாமணியில் தாளத்தின் சிறப்பினை,

'ஈரெண் பலத்தி லிசைசுத்த தாளத்தைச்
சாரவே தேவர் சபைதனிலும்.....'

(மகாபாரதச் சூடாமணி **880** பாடல்)

'ஈராறு பலத்தி லேனு மிரு நான்கு பலத்திலேனு
மாறாத சாள கத்தாளத்தனை மன்னர் கூடும்...'

(மகாபாரதச் சூடாமணி 881 பாடல்)

'தங்குநாற் பலத்தி கொண்ட வெகுசாரி தாளமென்றும்
சங்கீர்ண தாளநானா சாதிபலபேர்கள் கூட்டிப்.....'

(மகாபாரதச் சூடாமணி 882 பாடல்)

இப்படியான சபைகளில் பயன்படுத்துதல் சிறந்தது என நாட்டிய நூல்கள் குறிப்பிடுகிறது.

இப்படிப்பட்ட நட்டுவாங்கத்தாளத்தின் தோற்றம், அமைப்பு, அதன் சிறப்பு எதனால் செய்யப்பட்டது, அதன் பிரயோகமுறை நட்டுவனார் பகுதி முதலியவற்றைப் பார்த்தால்

**திறவுச்சொற்கள் - நட்டுவாங்கத் தாளம், நட்டுவனார்**

**தாளத்தின் தோற்றம்**

நாட்டியத்தில் பயன்படுத்தப்படும் கைத்தாளங்கள் பலவகைப்படுகின்றன. அத்தாளங்கள் செவ்வியல் நடனங்களின் சிறப்புத்தன்மை, அதன் தனித்துவம் அழகியல் அம்சம் என்பவற்றிற்கு ஏற்ப அமைப்பு முறைகளிலும், செயன்முறை ரீதியிலும், வேறுபாடு கொண்டமைந்ததுடன், காலப் பிரமாணத்தினை செவ்வனே சீராக வெளிப்படுத்த துணைசெய்கிறது எனலாம் பக்திநெறிக்காலத்தில் காரைக்கால் அம்மையார் பாடலில்

'....தாளம் வீணை
மத்தளம் கரடிகை
தமருகம் குடமுழா மொந்தை ...
அத்தனை விரைவினோடாடும் அப்பன்'

என்கிறார். திருவாலங்காட்டு மூத்ததிருப்பதிகத்தில் அதுமட்டுமல்லாமல் தாளத்தோடு

பொருந்தும்வண்ணம் வீணையை எம்பெருமான் இசைக்கிறார் என்று திருஞானசம்பந்தர் தேவாரத்தில்

'தமிழின் நீர்மை பேசித்தாளம் வீணை பண்ணி நல்ல.....'

இத்தேவாரத்தில் வீணை, முழவம், மொந்தை ஆகிய இசைக்கருவிகளைத் தாளத்துடன் பொருந்தும் வகையில் இயக்கியவர். இதனூடாக வாத்தியங்களின் இசைக்குத்தாளம் இன்றியமையாததாகக் காட்டுகிறார். இப்படிப்பட்ட தாளம் இசையில், நாட்டியத்தில் காலஅளவுகளை ஒழுங்குமுறையில் அமைப்பதற்குப் பயன்படுவது ஆகும். தாள் 10 அம் - தாளம் தாளாகிய பாதத்தை அம்மி (தட்டிப்) போடப்படுவதால் தாளம் என்ற பெயரினைப் பெற்றது.

'மடையில் வாளை பாய மாதரார்
குடையும் பொய்கைக் கோலக் காவுளான்...'

என்ற தேவாரத்தை ஞானசம்பந்தர் பாடும்பொழுது தன் கைகளால் தாளமிட்டுக் கொண்டு பாடினார். ஒரு கையோடு ஒரு கையை ஒத்தித் தாளம் போட்டுப் பாடினார். பிங்சுக்கைகள் நோவதனைக் கண்ட திருக்கோலக்கா இறைவன் பொன்னாலாகிய தாளம் வழங்கினார். இதனால் இவ் இறைவன் திருத்தாளமுடையார், என்றும் அழைக்கப்பட்டார். இத்தாளத்திற்கு இனிமையான ஓசையை இறைவிகொடுத்தார். இதனால் இவர் ஓசை கொடுத்த நாயகி என்றும் அழைக்கப்புடுகிறார். இதனைச் சுந்தரர் தேவாரத்தில்,

'நாளும் இன்னிசையால் தமிழ்பரப்பும்
ஞானசம்பந்தனுக்கு உலகவர்முன்
தாளம் ஈந்து அவன் பாடலுக்கிரங்கும் தன்மையாளன்

என குறிப்பிட்டுச் சிறப்பிக்கிறார். ஞானசம்பந்தருக்கு தாளம் வழங்கியமையை உணர்த்துகிறது. வெண்கலம் முதலிய உலோகங்களால் வார்க்கப்படும் கஞ்சர்கருவிகளில் தாளம், ஒன்றாகும். தாளத்திற்கென ஒரு இசைக்கருவி வடிவமைக்கப்பட்டது. இரண்டு உலோகத்துண்டுகள் வடிவமைக்கப்பட்டது. முதலில் தாளமாகப் பயன்படுத்தப்பட்டன.

இலக்கண சுத்தியோடு நவீன தாளக்கருவிகள் உருவாகின. இலைதாளம், குழிதாளம், அரங்கதாளம், நட்டுவத்தாளம் என தரத்துக்கும் தன்மைக்கும் ஏற்ப பெயர்களும் உருவாகின. இவை உலோகங்களால் செய்யப்படுகின்றன. இதில் வெண்கலமானது 'செம்பு' எண்பது பாகமும், வெள்ளியும், பதினைந்து பாகமும், பித்தளை ஐந்து பாகமம் சேர்வதே வெண்கலமாகின்றது என அபிதான சிந்தாமணி எடுத்துரைக்கின்றது. ஓதுவார்கள், நட்டுவனார்கள் நாட்டுப்புறப்பாடகர்கள் என இசையோடு தொடர்புடைய பலரும் தாளக்கருவியைப் பயன்படுத்துகிறார்கள்.

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

சிவாகம நூல்களில் தாளம் என்ற சொல்லுக்கு சிவனும், சக்தியும் சேர்ந்தது என்ற பொருள் படும்படி 'தா' என்றால் சிவனும் 'ள' என்றால் சக்தியும் என்று குறிப்பிடப்படுகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. இது 'கைத்தாளம்' என்று சொல்லும் இருவெண்கலக்குமிழ்களாகிய 'தாளம்' என்ற வாத்தியத்திற்கு மிகப்பொருத்தமாயிருக்கும் எனத் தாளசமுத்திரம் எனும் நூலில் குறிப்பிடப்படுகின்றது.

'கனஞ்சுத்தல் சாளக சங்கீரண தாளம்
இனமெத்த இரண்டு நான் செட்டாகும் - புனைந்த விரல்
முற்றுமிரண்டே இரண்டரையே மூன்றென்றார்
தொற்று மகலத்தியல்பு'

(தாளசமுத்திரம் - கஞ்ச 83)

எனும் செய்யுளினூடாக காம்சியதாளம் என்கின்ற ஜாலர் சுத்தம், சாளகம், சங்கீர்ணம் என்று மூன்று வகைப்படும். இவற்றில் சுத்த தாளத்திற்கு கனம் இரண்டுபலம், சாளக தாளத்திற்கு நான்கு பலம், சங்கீர்ண தாளத்திற்கு எட்டுப்பலம் கொண்டு அமைந்ததாக கனமும், சுத்ததாளத்தின் வாயகலம் இரண்டு விரலிடம், சாளக தாளத்தின் வாயகலம் இரண்டரை விரலிடமும், சங்கீர்ண தாளத்தின் வாயகலம் மூன்று விரலிடமும் கொண்டு காணப்பட வேண்டும் என்றும்,

'நற்குமிழொன் றெற்றேகால் ஒன்றரை விரல்கள்
முற்க முளுந்து சணல் முற்றுளைகால்- வர்க்க.....'

(தாளசமுத்திரம், கஞ் 84)

எனும் செய்யுளில் சுத்தாளத்திற்கு, துவாரம் பயரளவும், சாளக தாளத்தின் துவாரம் உழுந்தளவும், சங்கீர்ண தாளத்தின் துவாரம் சணல்விதையாகவும் கொண்டு, சுத்ததாளத்தின் குமிழ் ஒருவிரல் கதுமை, சாளகதாளத்தின் குமிழ் ஒன்றேகால் விரல்கதுமை, சங்கீர்ண தாளத்தின் குமிழ் ஒன்றரைவிரல் கதுமையாகவும் அமைதல் வேண்டும் எனக் கூறப்படுகின்றது.

'இடமரோன் சொற்கடக மேதுமமதி விட்டம்
தடகுமிழ் மேல் நன்னூல் தலைவி – விடுதுளைக்கால்....'

(தாளசமுத்திரம் கஞ்ச 85)

வண்ண மணிக்கட்டு மலரோன் விரற்குக்
கண்ணனே தர்ச்சனீக்குக் கங்காளன் - எண்ணரிய....'

(தாளசமுத்திரம் கஞ்ச 86)

என்னும் செய்யுளில் வலதுகைக்கு தெய்வம் விஷ்ணு கைமுத்திரை கபித்தம், தாளவட்டத்திற்குத் தெய்வம், ஆதித்தன், குமிழுக்குத்தெய்வம் இலட்சுமி, துளைக்குத் தெய்வம் காற்று, இடதுகை;குத் தெய்வம் பிரம்மா, கைமுத்திரை கடகாமுகம், தாளவட்டத்திற்குத் தெய்வம் சந்திரன், குமிழுக்குத்தெய்வம் சரஸ்வதி துளைக்குத் தெய்வம் காற்று என்றும், இரண்டு கைத்தாளத்தின்

கயிற்றுக்கும் தெய்வம் ராகு, கேது என்றும் இவைகளினின்று எழுகின்ற நாதம் சிவன் என்றும் கூறப்படுகின்றது. இன்னும் கைகளின் மணிக்கட்டுக்கு பிரம்மா, அங்குஷ்டத்திற்கு (கட்டைவிரல்), விஷ்ணு, தர்சனத்துக்கு (ஆள்காட்டி விரல்) ஈஸ்வரன், மத்திமைக்கு (நடுவிரல்) முருகன், அனாமிகைகக்கு (மோதிரவிரல்) அக்னி கனிஷ்டிகைக்கு (சுண்டுவிரல்) மன்மதன் என வணக்கத்திற்குரிய தேவர்கள் அனைவரையும் இந்தப் புனிதமானதும் தெய்வீகமானதுமான கலைக்கு சுருதி மாதா லயம் பிதா என முக்கியத்துவம் வாய்ந்த லயப்பகுதியை சீராகக் கட்டுக்குள் வைத்து நாட்டியப் பெண்ணையும் பக்கவாத்தியத்தையும் இணைத்து செயல்படும் கருவியாக நட்டுவாங்கத்தாளம் செயல்படுகிறது. தாளத்தின் வட்ட வடிவினையும் அதில் வாசம்செய்யும் தெய்வங்கள் பற்றி அரபத்த ராவலர் எழுதிய பரதசாத்திரம் எனும் நூலில்,

'வட்டமே பீடமாகும் வான்மிகுமி ழிலிங்க மாகும்
ஒட்டு நாண் ராகு கேதா மோசையே சிவமதாகும்
கட்டவிழ் குழவினாளே கருது மோங் காரவோசை
கொட்டுதே மலரோ னென்னைக் கூறினர்மாகினூலோர்'

எனும் செய்யுளினூடாக வட்டமான பகுதி பீடமாகவும் அதில் உள்ள குமிழ் சிவலிங்கமாகவும் அவற்றினை இணைந்திருக்கும் கயிறு இராகு கேதுவாகவும் அவற்றிலிருந்து வருகின்ற ஓசை சிவமாகவும், ஓங்காரவோசை தொனிக்கும் தாளத்திற்கு அதிதேவதை பிரமனாகவும் விளங்குகிறார் எனக் குறிப்பிடப்படுகிறது.

**தாளம் செய்யும் முறையும் அமைப்பும்**

'வானிற் காலுங்காலிற்நீயும்
ஆனதீயி லப்புமந்நீரில்
மண்ணு மதனி னிரதமு மதனில்
நண்ணு வெள்ளீயமும் நாகமும் வங்கமும்
செப்புந் தோன்றின செப்பிய செம்பும்...'

எனும் செய்யுளடியினூடாக ஆகாயத்தில் காற்றும், காற்றிலிருந்து நெருப்பும், நெருப்பிலிருந்து நீரும், நீரிலிருந்து மண்ணும், மண்ணில் இருந்து பதரசமும், பாதரசத்திலிருந்து வெள்ளீயம், துத்தநாகம், காரீயம், செம்பு என்பன தோன்றின. செம்புடன் வெள்ளீயம் கூடி வெண்கலம் தோன்றியது. இவ்வெண்கலத்தால் செய்த தாளங்கள் சுத்தம், சாளம், சங்கீரணம் என மூன்றும் முறையே ஒவ்வொன்றிற்கும், நான்கு பலம், ஆறுபலம், எட்டுப்பலம் ஆகியது. இந்த வெண்கலத்தை தைமாதம், திங்கட்கிழமை வளர்பிறை துதியை திருவோணம் கூடிய நாளில் ஆயிரங்கரியிட்டு உருக்கி சுத்தம் செய்து நான்கு விரல் அகலமும், சாளம் மூன்று விலர் அகலமும், சங்கீர்ணம் நாலரை விரல் அகலமும் செய்து தெளிந்த குளிர்ச்சியான நீரில் தோயவிட்டுக்கொள்வதே தாளம் செய்யும் முறை எனக் கூறப்படுகின்றது.

நுட்பமான ஜதிக்கோர்வைகளை நட்டுவாங்கத்தாளத்தில் மிருதங்கத்திற்கு இணையாக இசைக்கமுடியும். பழந்தமிழர் பயன்படுத்திய பல்வேறுவகையான தாளங்களில் எல்லா நயங்களும் தற்கால நட்டுவாங்கத் தாளத்தில் இருப்பதாகக் கொள்ளலாம் என்று நட்டுவாங்கத் தாளத்தினுடைய சிறப்பினைக் குறிப்பிடுகின்றார். **Dr**.ஞானாக்குலேந்திரன் அவர்கள்.

நட்டுவாங்கத் தாளமானது தட்டுத்தாளம் அணைப்புத்தாளம் என்று இருபகுதிகளைக் கொண்டிருக்கின்றது. ஒன்று இடதுகையில் பிடிக்கப்படும் இரும்புத்தாளம் அல்லது அணைப்புத்தாளம் என்றும், அதனை 'சிவனாகவும் இரண்டாவது வலதுகையில் பிடிக்கப்படும் வெண்கலத்தாளம் அல்லது தட்டுத்தாளத்தினை சக்தியாகவும் கொண்டு' தட்டப்படுகிறது. இதன்விட்டம் இரண்டுமுதல் மூன்று அங்குலம் வரையாக இருக்கும் நடுப்பாகம் ஆழமாகக்குழிந்து விளிம்புவரை கருகலாக அமைந்திருக்கும். இதன் விளிம்பு அகலமாகவே இருக்கும் குழிப்பகுதியின் மையத்தில் இருக்கும் துறைவழியாகக் கைப்பிடிப்பதற்கு ஏற்றவாறு நூல் கயிற்றினால் இறுக்கப்பட்ட கைப்பிடி சுமார் 4 அங்குல நீளத்தில் அமைந்திருக்கும். தாளத்தில் மற்றொன்று வலதுகையில் பிடிக்கும் இரும்புத்தாளத்தின் மேல் தட்டும் தட்டுத்தாளம் ஆகும். இது வெண்கலத்தாளமாகும். இதன் விளிம்பு (உதடு) முதல் குழியாக அமைந்து மத்தியில் உள்ள துளையில் நூற்கைப்பிடி சுமார் 4அங்குல நீளத்தில் இறுக்கிக்கட்டியிருக்கும். இதன் விட்டம் 1 முதல் 2 அங்குலம் வரையிருக்கும்.

தட்டும்பொழுது இதன் அதிர்வு இதன் விட்ட அளவுகனம் இவற்றைப் பொறுத்தே அமைந்திருக்கும். நாட்டியக்கச்சேரியின் போது அதன் வேகத்தைக் கட்டுப்படுத்தி வழிநடத்திச் செல்வதற்கு நட்டுவாங்கத் தாளம் செயற்படுகிறது.

பரதநாட்டியத்திற்குப் பயன்படுத்தப்படும் தாளம் 'நட்டுவாங்கத் தாளம்' எனப்படும். தென்னிந்திய செவ்வியல் நடனங்களில் பரதநாட்டியம், குச்சுப்புடி, மோகினியாட்டம் ஆகிய நடனங்களில் நட்டுவாங்கத்தாளம் சிறப்பிடம் பெறுகின்றது. பக்கவாத்தியக் கருவி இசையாளர்களோடு இணைந்து நாட்டியப்பெண்ணை வழிநடத்திச் செல்வதற்கும் இன்றியமையாத அங்கமாகத் திகழ்கின்றது.

நாட்டியக்கலையைப் பிரமன் ஐந்தாம் வேதமாகப் படைத்து பரமேஷ்வரன் ஆடிய தாண்டவத்திற்குத்தானே தாளம் நட்டுவாங்கம் செய்தார் என்று புராணக்கதைகள் மூலம் அறியமுடிகின்றது. பக்கவாத்தியக்கலைஞரோடு இணைந்த சீரான காலப்பிரமாணத்தில் நாட்டியம் செய்யும் நர்த்தகியையும் இணைத்துச் செல்வதற்கு நட்டுவாங்கம் இன்றியமையாததாகக் காணப்படுகின்றது. அதைக் கையாளுபவர்கள், நட்டுவனார்கள் என்பவர்கள் நாட்டியம் செய்யும்போது ஜதிகள் சொல்லி நிகழ்ச்சியை நடத்தி வைப்பவர்கள் ஆவார்கள். அத்துடன் இசைஞானம், தாளஞானம் உள்ளவர்களாக மாத்திரம் இருந்தால் போதாது தாளக்கணக்குகளிலும் வல்லவர்களாக இருத்தல் வேண்டும்.

ஸ்தானம், பாதசாரி மண்டலங்களின் அளவு பாவம், கரணம், நாட்டம் அங்கஹாரம் இவற்றில்

நல்ல அறிவும், ஈனமில்லாத தொழிலுடைமையும், சுற்றங்களுடைமையும் பெற்று சாளவ சங்கீர்ண தாளபேதங்களனைத்தையும் அறியும் அறிவும் துளைக்கருவி, நரம்புக்கருவி, கஞ்சக்கருவி ஆகிய கருவிகளின் அறிவும் தாளமிகுந்த தசாங்கத்தின் செய்கையாலான நடனபேதங்களின் தெளிவும் பெற்று அவற்றைத் தானே செய்ய வல்லவராயும் (அதாவது நட்டுவன் என்பவன் நடனம் ஆடத்தெரிந்திருக்க வேண்டும் என்பது மிக முக்கியமான அங்கமாகும்) சர்வபாஷைகளின் அறிவு பொருந்தியவனாயும் இருப்பவனே நட்டுவனாவான் என்கிறது. மஹா பாரதச் சூடாமணி.

நட்டுவாங்கம் பற்றி தஞ்சாவூர் கே.பி கிட்டாப்பிள்ளை அவர்கள் கூறுகையில்,

> 'லயசுத்தத்தோடு நட்டுவாங்கச் சொற்கட்டுக்களை இசைத்துக் கைத்தாளத்தைப் பிடிப்போடு போடவேண்டும். அப்பொழுதுதான் ஆடுபவர் அங்கங்களில் பாடலின் சுவைக்கும் உணர்வுக்கும் பொருந்த நாட்டியம் இயல்பாகவும் அழகாகவும் அமையும்' என்கிறார்.

(சுருதி Dec 1985, P.30)

ஆதிகாலத்தில் நாட்டிய ஆசான்களைப் பொதுவாக 'நட்டுவனார்கள்' என்று குறிப்பிடுதல் வழக்கம். 'நாடகப் பெண்ணை ஆட்டும் நட்டுவன்' என்கிறது (கண்பதி தாசர் பாடல்) 'நட்டுமுட்டுக்காரனோ' என்கிறது (சேதுபதிவிறலிவிடுதூது), 'நட்டுவனின்றி நடமாடும் சீரங்கநாயகனே' (சீரங்கநாயகமாலை) 'நட்டுவுனி கோடலு' (க்ரீடாயிராமமு), 'நட்டுமுட்ட காண்ட்லு' (கிரிராஜகவியின் ஸர்வாங்க ஐந்தரீ விலாஸமு), இப்படிப் பல்வேறு இலக்கியங்களிலும் 'நட்டுவன்' அல்லது 'நட்டுமுட்டு' போன்ற சொல்லாட்சிகளைக் காணமுடிகிறது. 'நட்டுவர் முட்டுக்காரர்' (திருமலை குலோத்துங்கனின் திருவிடை மருதூர்க்கல்வெட்டு - கி.பி.1990) இப்படி ஏராளமான கல்வெட்டுக்களிலும் 'நட்டுவ' என்ற சொற்பிரயோகம் மலிந்து காணப்படுகின்றது. நாட்டியம் பயிற்றுவிக்கும் ஆசிரியரை நட்டுவனார் எனக் குறிப்பிடப்படுகிறது.

அதுமட்டுமல்லாமல் ஒரு நாட்டியாச்சாரியன், தமது கலை பற்றிய சாத்திரங்கள் சமஸ்கிருதம், தெலுங்கு போன்ற பன்மொழிகளில் புலமை, பாட்டு, மிருதங்கம் வாசித்தல் போன்ற பலவற்றில் திறமைமிக்கவராக இருத்தல் அவசியம்.

> 'கவி வாத்ய ப்ரபந்தேஷ ஸ்வலயம் வாதன கோவித
> வாத்ய ச்ருதீ ஸ்ர்வாமுக வாத்யா விசாரத....
> சதுர சிஷ்ய சிஷhயாம் நர்த்தனே நிபுண : ஸ்வயம்....'

கவிதை வாத்தியங்கள் பற்றிய நூல்களில் தேர்ச்சி வாத்தியங்களைக் கையாளும் திறமை, சொற்கட்டுக்களைக் கொலுப்பிப்பதில் வல்லமை, சீடர்களுக்கு பயிற்றுவிப்பதில் திறமை. தாமே ஆடிக்காட்டும் வன்மை, இசைக்குழுவை இயக்குவதில் அறிவு வேறு பிராந்தியங்களின் நடனங்கள் பற்றித் தெரிந்து இருத்தல். மரபுவழி ஆசான்களிடம் கலைப்பயிற்சி, அஹங்காரமின்மை, தாளங்கள் பற்றிய அறிவு, வாக்குவன்மை, பாட்டிலும் இசைக்கருவிகளைக் கையாளுவதிலும்

ஆழ்ந்தபுலமை, இவையாவும் அமையப்பெற்றவரே நாட்டியஆசான் என்று கூறத்தக்கவர் என நிருத்த ரத்னாவளி கூறுகின்றது. அடுத்து, 'பாட்டுவிக்கப்பாடப் பரதவிதத்தாற்கூத்தை ஆட்டுவிக்க, ஆட அருங்கரணம் பூட்டுவிக்கத் திட்டமுடன் பல பாடை தேர்ந்து கற்றுப் பேசுவிக்க வட்டதிக்கெண்ணட்டுவனேயாம்'என்று இலக்கணத்தைப் 'பஞ்சமரபு' சுட்டிக்காட்டுகிறது. இதன்மூலம் நாட்டியத்திற்கு இன்றியமையாது இதனுடைய பங்களிப்பு அவசியமாகின்றது. நட்டுவாங்கம் செய்கின்ற நட்டுவனார்கள், பாடலுக்கும், பாடல் அமைந்த தாளக்கணக்கு முறைக்கும், கடினமான ஜதிகளை (ஜாதிபேதங்களை) வாயில் சொல்வதும், நடனமணி ஆடுகின்ற அடைவுகளுக்கு ஏற்ப எளிமையான, அழகியல் அம்சத்துடன், தத்துருவமாக தாளநுணுக்கமுடன் கூடிய தட்டுதல்களாக கைத்தாளத்தில் அதாவது நட்டுவாங்கம் செய்கின்றனர்.

**முடிவுரை**

இதன்மூலமாக, நட்டுவாங்கம் என்ற பதத்தினூடாக நட்டுவாங்கத்தாளம் என்றால் என்ன? நட்டுவாங்கத்தாளத்தின் தோற்றம், அதன் சிறப்பு, நட்டுவாங்கத்தாளம் செய்யப்படும் விதம், அமைப்பு, பிரயோகிக்கும் தன்மை நட்டுவனார் தகுதி என்பனவற்றைப் பார்த்தோம்.

உசாத்துணை நூல்கள்

1. அரபந்தநாவலர் பரதசாஸ்திரம்
2. ஆளவந்தார் -ஆர், தமிழர் தோற்கருவிகள்
3. ஞானாகுலேந்திரன்.Dr, பழந்தமிழர் ஆடல் இசை
4. பாலச்சந்த்ர ராஜு ஸ்ரீ எஸ், நாட்டிய நட்டுவாங்கம் சாரம்
5. சுந்தரம் பி.எம், மரபுவழிப்பரதப் பேராசான்கள்
6. சுந்தரம் வி.ப.கா, தமிழிசைக் கலைக்களஞ்சியம்
7. சிங்கார வேலுமுதலியார்.ஆ., அபிதான சிந்தாமணி
8. சுதாராணி ரகுபதி லகுபரதம்
9. சூரியமூர்த்தி.இ.உ.Dr., தமிழிசைச் சங்கம் வெள்ளிவிழா ஆண்டுமலர்-மதுரை 2000 கட்டுரை தமிழிசைக்கருவி
10. வாசுதேவாசாஸ்திரிகள் ஸ்ரீ.எஸ், முகவுரை தாள சமுத்திரம்
11. மகாபாரதச் சூடாமணி
12. நிருத்த ரத்னாவளி